2. சிறப்புக் கவன ஈர்ப்பு

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், பழனிப்பேட்டை இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம், பழனிப்பேட்டை இரயில்வே மேம்பாலத்தினை உடனடியாகக் கட்ட வேண்டியது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரம், பழனிப்பேட்டை பகுதியில் ஆயிரக்கணக்கான இரயில் பயணிகளும், பொதுமக்களும் அங்கே இருக்கக்கூடிய குறுகிய சுரங்கப்பாதையில் வெளியேயும், உள்ளேயும் செல்ல முடியாததால் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதனைத் தீர்ப்பதற்கு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம்-அரக்கோணம்-திருத்தணி மாநில நெடுஞ்சாலையில் பழனிப்பேட்டையில் சுரங்கப்பாதை அமைந்துள்ளது. அதில் தற்போது சிறிய இரக வாகனங்கள்,* car, jeep, auto, *இரு சக்கர வாகனங்கள் போன்றவை சென்று வருகின்றன. லாரி, பேருந்து போன்ற கனரக வாகனங்கள் மேல்பாக்கம் மேம்பாலம் வழியாக தற்போது சென்று வருகின்றன. தற்போது இரயில்வே கேட் அகற்றப்பட்டு, எந்தவித தடையுமின்றி போக்குவரத்து சுமுகமாகச் செயல்பட்டு வருகிறது. 'பழனிப்பேட்டை சுரங்கப்பாதைக்குப் பதிலாக, சாலை மேம்பாலம் அமைக்கப்படும்' என மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களால் 2014–2015 ஆம் ஆண்டில் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது.*

தற்போது ஓர் இரயில்வே மேம்பாலம் உள்ளது. அரக்கோணம்–ஓச்சேரி சாலை மற்றும் அரக்கோணம் புறவழிச் சாலையில் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு, சென்னை–கன்னியாகுமரி தொழில்வழித் தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், பழனிப்பேட்டை சாலை மேம்பாலம் கட்டுமானத்திற்கு அதிக நில எடுப்பு தேவைப்படுவதாலும், குடியிருப்புகள் அதிகமாக இருப்பதாலும், சாலை மேம்பாலம் அமைப்பது சாத்தியம் இல்லையென்று முடிவு செய்து, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், தற்போது இருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 10–45

அரசாணை நிலை எண் 128, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 12–10–2020 மூலமாக இந்தத் திட்டம் ஏற்கெனவே இரத்து செய்யப்பட்டிருக்கிறது. திரைப்படத்தில் ஒரு பாடல் உண்டு, "கொடுத்தவனே பறித்துக் கொண்டான்டி" என்று. ஏற்கெனவே அந்த அரசால் அறிவிக்கப்பட்டு, அவர்களாலேயே இரத்து செய்யப்பட்டுவிட்டது. இருந்தாலும் ஏற்கெனவே உள்ள மேம்பாலம், மேல்பாக்கம் மேம்பாலம் மூலமாகவும், அரக்கோணம் புறவழிச் சாலை மற்றும் அரக்கோணம்–ஓச்சேரி சாலையில் புதிதாக இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட உள்ளதாலும், பழனிப்பேட்டையில் இரயில்வே மேம்பாலம் கட்ட அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு வடசென்னையில் மணிமண்டபம் அமைத்தல் குறித்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர், ஔவையார், கபிலர்,*